பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
10 05 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவின் முக்கிய நகரங்களை குறிவைத்து பாகிஸ்தான் நேற்று இரவு மேற்கொண்ட ட்ரோன் தாக்குதல் முயற்சியை ராணுவம் வெற்றிகரமாக முறியடித்தது.

2. வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில் உள்ள 32 விமான நிலையங்கள், வரும் 14ஆம் தேதிவரை தற்காலிகமாக மூடப்படுவதாக இந்திய விமான நிலைய ஆணையரகம் அறிவித்துள்ளது.

3. எல்லைப்புற பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு ரயில்வே அதிகாரிகளுக்கு அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் உத்தரவிட்டுள்ளார்.

4. குஜராத் மாநிலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் ஆய்வு செய்தார்.

5. **Taipei** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<<<**

ஸ்ரீநகர் விமான நிலையம் உட்பட நாட்டின் வடமேற்கு மாநிலங்களை ஒட்டிய பகுதிகளின் மீது, பாகிஸ்தான் நேற்றிரவு நடத்திய ட்ரோன் தாக்குதலை இந்தியா வெற்றிகரமாக முறியடித்தது.

வடக்கு காஷ்மீரில் உள்ள பாரமுல்லாவிலிருந்து, குஜராத்தில் உள்ள பூஜ்-வரை பல நகரங்களை குறிவைத்து பாகிஸ்தான் மேற்கொண்ட ட்ரோன் தாக்குதல்களை பாதுகாப்புப் படையினர் முறியடித்தனர்.

சர்வதேச எல்லை மற்றும் பாகிஸ்தானுடனான எல்லை கட்டுப்பாட்டு கோட்டு பகுதியை ஒட்டியுள்ள விமான நிலையங்கள் மற்றும் விமான தளங்களை குறிவைத்து இந்த தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஜம்மு காஷ்மீரில் ஸ்ரீநகர், பாரமுல்லா, அவந்திப்புரா, ஜம்மு, பஞ்சாப் மாநிலத்தில் பெரோஸ்பூர், அமிர்தசரஸ், பதான்கோட், ராஜஸ்தானில் ஜெய்சால்மர், பார்மர், குஜராத் மாநிலத்தில் புஜ், குவார்பெட் மற்றும் லக்கி நாலா ஆகிய இடங்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஃபெரோஸ்பூர் பகுதியில் பொதுமக்கள் வசிப்பிடங்கள் மீது குறிவைத்து ட்ரோன்கள் ஏவப்பட்டதாகவும், இதில் ஒரு வீடு சேதமடைந்ததாகவும், அந்த வீட்டில் இருந்தவர்களில் 3 பேர் காயமடைந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், ஜம்மு மற்றும் சம்பா மாவட்டங்களில் சர்வதேச எல்லையை ஒட்டிய ராம்கர், **Suchetgarh** ஆகிய இடங்கள் மீது, சிறியரக பீரங்கிகளை கொண்டு பாகிஸ்தான் தாக்குதலை நடத்தியதாகவும், ராணுவத்தினர் உடனடியாக பதில் தாக்குதல் நடத்தி அவர்களது முயற்சியை முறியடித்ததாகவும் ராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்றும் பாதுகாப்புப் படையின் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

எல்லையில் நிலவும் சூழல் குறித்து அவர்களிடம் பிரதமர் கேட்டறிந்தார்.

முன்னதாக, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் மற்றும் முப்படைகளின் தளபதிகள், பிரதமரை சந்தித்து அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்

>>>>>><<<<<<<

வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில் உள்ள 32 விமான நிலையங்கள், வரும் 14ஆம் தேதிவரை தற்காலிகமாக மூடப்படுவதாக இந்திய விமான நிலைய ஆணையரகம் அறிவித்துள்ளது.

அமிர்தசரஸ், சண்டிகர், ஜம்மு, ஸ்ரீநகர், பூஜ், ஜாம்நகர், ஜெய்சால்மர், பதான்பூர் உள்ளிட்டவை இதில் முக்கியமான விமான நிலையங்களாகும்.

இந்த காலகட்டத்தில், கூடுதலாக தில்லி – மும்பை இடையே 25 விமான வழித்தடங்களும் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழித்தடத்தில் இயக்கப்படும் விமானங்களில் பயணம் செய்வோர் பாதிக்கப்படாமல் இருக்க, மாற்று வழித்தடங்களை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<

இந்தியா – பாகிஸ்தான் இடையே பதற்றம் நீடித்து வரும் நிலையில், வடக்கு மற்றும் வடமேற்கு மாநிலங்களில் ரயில் போக்குவரத்து நிலைமை குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

எல்லைப்புற பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகளை ரயில்வே அதிகாரிகள், பல்வேறு அரசு துறைகளுடன் இணைந்து மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

ரயில்வே அமைச்சரின் அறிவுறுத்தலை அடுத்து, ஜம்மு - உதாம்பூர் இடையே 4 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல், வந்தேபாரத் விரைவு ரயில், உதாம்பூரிலிருந்து ஜம்மு, பதான்கோட் வழியாக புதுதில்லிக்கு இயக்கப்பட்டு வருகிறது.

கிரிக்கெட் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் பயணம் மேற்கொள்ளும் வகையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், ஜம்முவிலிருந்து புதுதில்லிக்கு மற்றொரு வந்தேபாரத் சிறப்பு ரயில் இயக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<<

பாகிஸ்தான் தனது வான் எல்லையை இன்று நண்பகல் 12 மணிவரை மூடுவதாக அறிவித்துள்ளது.

பெஷவார் செல்லும் பாகிஸ்தானின் சர்வதேச விமானம், பலுசிஸ்தானில் உள்ள குவெட்டா மீது பறக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பாகிஸ்தான் வான்வழியில் வர்த்தக ரீதியிலான விமானங்களின் போக்குவரத்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மற்றொரு பாகிஸ்தான் விமானம், அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<<

குஜராத் மாநிலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவமனைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் இருப்பு குறித்து அம்மாநில அரசு ஆய்வு செய்துள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் இடையிலான பதற்றத்தை பயன்படுத்திக் கொண்டு, எல்லைப்புற பகுதிகளில் அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுக்குள் இருப்பதை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் தலைமையில் நேற்று நடைபெற்ற அவசர ஆலோசனைக் கூட்டத்தில், எல்லைப்புற மாவட்டங்களில் தற்போதுள்ள நிலைமை குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.

பாகிஸ்தானுடன் நிலம் மற்றும் கடல் வழியாக எல்லையை பகிர்ந்து கொள்ளும் ஒரே மாநிலம் குஜராத் என்பதால், அங்கு கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தின் எல்லைப்புற பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் முக்கியமான துறைமுகங்கள், சோம்நாத் மற்றும் துவாரகா ஆலயங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**Banaskantha, Patan, Kutch** ஆகிய எல்லைப்புற மாவட்டங்களில் 150க்கும் மேற்பட்ட மருத்துவர்களுடன் அரசு மருத்துவமனைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<<

தெலங்கானாவில் மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த 8 பெண்கள் உட்பட 38 பேர் மாநில காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

இவர்கள் அனைவரும் சத்திஷ்கர் மாநிலம், பிஜப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெலங்கானா மாநிலம், **Bhadradri** மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளரிடம் இவர்கள் சரணடைந்தனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை 265 மாவோயிஸ்ட்டுகள் சரணடைந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பழங்குடியின மக்களின் ஆதரவை இவர்கள் இழந்ததால், வேறு வழியின்றி காவல்துறையினரிடம் சரணடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<<

நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதி 100 கோடி ரூபாயிலிருந்து 150 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்தாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் மாநில அரசு வெளியிட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பணிகள் அனைத்தும் ஊரக பகுதிகளில் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகள், மருத்துவமனைகள், எரிவாயு தகன மேடை ஆகிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், ஊரகப் பகுதிகளில் நூலகங்கள், சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள் அமைப்பதற்கு இந்த திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

இந்திய ராணுவத்திற்கு ஆதரவாக சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் இன்று மாலை பேரணி நடைபெறவுள்ளதால், அந்த சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இன்று மாலை பாரிமுனையிலிருந்து கடற்கரை காமராஜர் சாலை நோக்கி வரும் வாகனங்களும், அடையாறிலிருந்து காமராஜர்சாலை வழியாக பாரிமுனை நோக்கிச் செல்லும் வாகனங்ளும் மாற்றுப்பாதையில் திருப்பி விடப்படும் என்று சென்னை மாநகர போக்குவரத்து காவல்துறை அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

இந்தியா நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான முதல் சுற்று பேச்சுவார்த்தை நேற்று புதுதில்லியில் முடிவடைந்தது.

இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவுபடுத்துவதற்கான முதல் நடவடிக்கையாக இந்த பேச்சுவாரத்தை கருதப்படுகிறது.

சேவைத்துறை, வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றில் பரஸ்பரம் பலனடையும் விஷயங்கள் தொடர்பாக இருநாகளின் பிரதிநிதிகள் விரிவாக விவாதித்ததாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<<<**

**Taipei** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தைபேயில் நேற்று நடைபெற்ற ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், கனடாவின் **Prayan Yang**-ஐ 16-21, 21-19, 21-14 என்ற செட்கணக்கில் வென்றார்.

இன்று நடைபெறவுள்ளஅரையிறுதிப் போட்டியில் **Ayush Shetty** தைவானின் **Chou Tien Chen**-ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Unnathi Hooda,** ஜப்பானின் **Miya Zaki**-ஐ எதிர்கொள்கிறார்.

**>>>>>><<<<<<<**

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா 8-0 என்ற கோல்கணக்கில் இலங்கையை வென்றது.

அருணாச்சலப்பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் **Danny Meitei** தொடர்ச்சியாக 3 கோல் அடித்து ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள அடுத்த போட்டியில், இந்தியா – நேபாளத்தை எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று, பங்களாதேஷ் - மாலத்தீவு இடையேயான போட்டி 2-2 என்ற கோல்கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

**>>>>>><<<<<<<**

நாமக்கல் மாவட்டம், ஆரியாகவுண்டம்பட்டியில் நடைபெற்ற கபடிப் போட்டியில் மதுரை சுங்கத்துறை அணி முதலிடம் பிடித்தது.

நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் அந்த அணி, சென்னை வருமானவரித் துறை அணியை வென்றது.

**>>>>>>END<<<<<<<**